JAIRAM ARTS & SCIENCE
18 MAR 2024
SALEM - 8

பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY
SALEM – 636011, TAMIL NADU, INDIA
NAAC 'A++' Grade (Cycle-3)- State University - NIRF Rank '59' Innovation Band of 11-50

1924 - 2023

| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| முனைவர் S. கதிரவன்<br>தேர்வாணையர் (முகூபொ)<br>பெரியார் பல்கலைக்கழகம்<br>சேலம் - 636 011. | முதல்வர்கள்<br>பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற<br>அனைத்து கல்லூரிகள் |

எண். பெ.ப/தே.அ/CRE-IV/செய்முறைத்தேர்வு/ ஏப்ரல்_மே 2024/ 24F91394 நாள்: 18.03.2024

அய்யா/அம்மையீர்,

பொருள்: பல்கலைக்கழக ஏப்ரல்/மே 2024-ஆம் பருவ செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை Online-ல் பதிவு செயவதற்கான வழிமுறைகள் - தொடர்பாக.

-------

பெரியார் பல்கலைக்கழக இணைவுப்பெற்ற கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஏப்ரல்/மே 2024-ஆம் பருவத்திற்கான செய்முறைத் தேர்வுகள் 25.03.2024-ஆம் தேதி முதல் துவங்கி நடைபெற உள்ளது. மேலும் இணைப்பில் உள்ள பாடப்பிரிவுகளுக்கு புறத்தேர்வாளர்கள் நியமனம் செய்து அதற்கான பட்டியியல் தங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை Online-ல் பதிவு செய்து Printout எடுக்க கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1) பெரியார் பல்கலைக்கழக www.periyaruniversity.ac.in என்ற இணையதளத்தில் Login என்ற Link ஐ பயன்படுத்தவும்.
2) தங்களுடைய கல்லூரி குறியீட்டு எண் (College Code) மற்றும் Password கொடுத்து Login செய்யவும்.
3) "April/May 2024 Examinations UG/PG PRACTICAL MARK ENTRY" ஐ Click செய்யவும்.
4) வருடம், பாடப்பிரிவு மற்றும் தாள் குறியீடு ஆகியவற்றை தேர்வு செய்து "Show" பட்டனை Click செய்தால் மாணவர்களின் விவரம் பட்டியலிடப்பட்டிருக்கும்.
5) அதிலிருந்து அந்த Batch-ற்கு தேவையான மாணவர்களை 'Select' செய்து மதிப்பெண்களை பதிவு (Entry) செய்யவும்.
6) மதிப்பெண்களை பதிவு செய்த பின் கவனமாக சரிபார்த்து அவைகள் சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்த பின் Save செய்யவும்.
7) Batch List பட்டனை Click செய்தால், பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை Batch வாரியாக கொடுக்கப்பட்டிருக்கும். அதில் உள்ள 'Print' பட்டனை 'Click' செய்தால் மாணவர்களின் மதிப்பெண்கள் பட்டியலிடப்பட்டிருக்கும். அவற்றை, Printout எடுத்து அகத்தேர்வாளர் மற்றும் புறத்தேர்வாளர் கையொப்பமிட்டு தேர்வாணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(P.T.O)

ஏப்ரல்/மே 2024-ஆம் பருவ செய்முறைத் தேர்விற்கு பல்கலைக்கழகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள விடைத்தாள்களை மாணவர்களிடம் கொடுத்து சரியாக பூர்த்தி செய்ய வேண்டும்.

தேர்வாளர்கள் (Internal and External Examiners) சம்பந்தப்பட்ட விடைத்தாளினை மதிப்பீடு செய்து உரிய மதிப்பெண்களை விடைத்தாளில் பதிவு செய்யவேண்டும்.

செய்முறைத் தேர்வுகள் முடிந்தவுடன் மாணாக்கர்களின் விடைத்தாள்கள், தேர்வு நடைபெற்ற தேதி, Batch, மாணாக்கர்களின் வருகைப்பதிவேடு (Ref. Annexure-III) இவற்றுடன் மீதமுள்ள விடைத்தாள்களையும் சேர்த்து தேர்வாணையர் அலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

> செய்முறைத் தேர்வு மதிப்பெண்களை Online-ல் பதிவு செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பின் ஏதேனும் தவறு கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவற்றினை 10 நாட்களுக்குள் சரி செய்து கொள்ளவேண்டும். அதன் பின் வரும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.
>
> மேலும், பல்கலைக்கழகத்திற்கு Online-ல் தேர்வு கட்டணம் செலுத்திய மாணவர்களை மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்தாத மாணவர்களை தேர்வு எழுத அனுமதிக்க கூடாது. இதை மீறி அனுமதித்தால் சம்பந்தப்பட்ட கல்லூரி மற்றும் மாணவன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அம்மாணவருக்கு எந்த ஒரு தேர்வு முடிவும் பல்கலைக்கழகத்தால் வழங்க இயலாது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தேர்வாணையர்

Phone: 0427- 2345091 Email - pucoe2013@gmail.com
Website: www.periyaruniversity.ac.in